கல்லறை நோக்கிற்று கூமின்டாங் கட்சி!

திபேத்மீது வலை வீசுகிறது டாலர் முதலாளித்வம்!

இந்திய, பிரிட்டன் உதவியோடு இராணுவத் தளத்துக்கு முஸ்தீபாம்!

ஆங்கிலோ-அமெரிக்கப் பாதையில்தான் செல்லுமா நேருசர்க்கார்?

சீனாவின் இன்றியமையாத அங்கமாகும் திபேத். சீன மக்கள் மொத்தத்தோடும் திபேத்தைத் தங்களுடைய தாகவே கருது கின்றனர். அமெரிக்கர் அதனை சீனாவினின்றும் பிளவு படுத்திப் பிரித்து, தங்களுடைய சொந்தக் காலனியாவும், இராணுவத் தளமாகவும் ஆக்கிக்கொள்ள முயன்று வருகின்றனர். சீனாவை அடிமைப்படுத்திக் கொள்ளத் தான் போட்ட திட்டங்கள் படுதோல்வியடைந்தவே. அமெரிக்கா, இப்போது பிரிட்டிஷ் உதவியோடு திபேத்தைக் கவர திட்டமிட்டு வருகிறது.

சீனா—திபேத் வரலாற்று ஏடுகளைப் புரட்டினால் நன்கு தெரிய வரும், திபேத் மீது சீன ஆதிபத்தியம் என்றென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்திருக்கிறதென்பது. திபேத்தைக் கைவசப்படுத்த ஆரம்பத்தில் முன்னீடு செய்த பிரிட்டனும்கூட, பின்பு சீனாவுக்கு திபெத்தின் மீதுள்ள ஆதிபத்திய உரிமையை யேற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

திபேத்தைச் சூழிப்பதில் இந்தியாவும் ஆங்கிலோ—அமெரிக்கக் குழுவின் கைப்பாவையாகிவிட்டது. சீன அதிகாரிகளைத் திபேத்திலிருந்து வெளிக் கடத்தவும், திபேத் எல்லையை யொட்டி எண்ணற்ற விமானத் தளங்களை நிறுவவும் இந்தியா ஐரோப்பியக் குழுவினருக்கு பேருதவியாயிருந்திருக்கிறது. இந்திய பூர்ஷ்வா பத்திரிகைகள் சீனாவையும், திபேத்தையும் பிரித்துவைத்து வேடிக்கைப் பார்க்க சல்லடம் கட்டி நிற்கின்றன."

மாஸ்கோவிலிருந்து வெளிவரும் சோவியத் இதழ் 'நியூ டைம்ஸ்' — வெளியிட்டிருந்திருக்கும் கட்டுரையொன்றின் மொழிப்பை மேலே தந்துள்ளோம். மேற்படி கட்டுரையை யெழுதும் தோழர் டி. பெர்ஷோவ், அண்மையில் லோவல்தாமஸ் திபேத்துக்கு வருகை தந்தது 'அமெரிக்க சதி வேலையின்' ஒரு படலமே யாகுமென்றும், தலாய்லாமவுக்கு இராணுவ உதவியளிக்கவும், ஐ. நா. வில். திபேத்துக்கு ஒரு இடம் வாங்கித் தரவும் அமெரிக்கா ஆயத்தமாயுள்ளதென்று எடுத்துக் கூறவே, லோவல்தாமஸ் வந்தாரென்றும் குறிப்பிடுகிறார்: திபேத்தில் சீனருக்குள்ள உரிமை என்றுமே வரையறுக்கப்படதில்லையே யென்று வாஷிங்டனிலிருந்து திரும்பிய பண்டித நேரு திட்டவட்டமாகக் கூறியதைக் குறிப்பிட்டு, ஆங்கிலோ—அமெரிக்கப் பாதையிலே இந்தியாவும் செல்லுகிறதெனக் குறிப்பிடுகிறது 'நியூ டைம்ஸ்'

உலகிலேயே ஒரு பெரும் நாடாகிய சீனா பெரிதும் சிவப்பாகிவிட்டது. சியாங் கூட்டத்தினர் 'அல்லோலகல்லோலப்பட்டு' தலை தெறிக்க ஓட்டம் பிடித்து வருகின்றனர். தேசிய சர்க்காரின் தற்காலிகத் தலைநகரங்களெல்லாம் மணிக்கணக்கிலேயே கம்யூனிஸ்டு மயமாகி வருகின்றன. இறுதியாக எஞ்சியிருந்த சுங்கிங்கும் வீழ்ந்துவிட்டது. சியாங்கே-ஷேக் ஓட்டமும் நடையுமாகவே இருந்துகொண்டு, உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் ஒரு சில ஆதரவாளர்களுடன் மந்திராலோசனை செய்து கொண்டிருக்கிறார்!

சுங்கிங்கின் வீழ்ச்சி தேசியவாதிகளின் கூமின்டாங் சர்க்காருக்கு வக்குழி தோண்டியாயிற்றென்பதை சித்தரிப்ப தொன்றாகும். கம்யூனிஸ்டுகளின் அதிதீவிர முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டைப் போடுவதாக மனப்பால் குடித்துக்கொண்டிருந்த சியாங் சேனையின் மண்டையிலடித்துவிட்டது 'சுங்கிங் வீழ்ச்சி!' தேசியவாதிகளென்று கூறிக்கொள்ளும் பிற்போக்குச் சக்திகளின் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளி, சீனாவைப் புனித நாடாக்கி, அண்டை அயல் நாடுகளுடன் கம்யூனிஸ்டுகள் நேரடித் தொடர்பு வைத்துக்கொள்ளப்போகும் காலம் வெகுவாக நெருங்கியேவிட்டது.

இங்கிலையிலும் கம்யூனிஸ்ட் சீனாவுக்கு அங்கீகாரம் அளிப்பதா, கூடாதவென்று மேற்கத்திய வல்லரசுகளும், அவற்றுள் மாட்டி வதைபடும் இந்தியாவும் சிங்கனைச் சுழலில் சிக்குண்டு நிற்கின்றன அங்கீகார விஷயத்தில் சீன பிரச்சினையையே தள்ளிப் போட்டுவிடுவோமென்று அமெரிக்கா ஐ. நா. வுக்கு ஆய்வுரை கூறுவதும், பிரிட்டன் யோசனை செய்திருப்பதும், ஐரோப்பிய வல்லரசுகளுடன் 'வம்பு' எதற்கென்று இந்தியா 'ஏனோதானோ' என்றிருப்பதும் இனியும் அனுமதித்து ஏற்றுக்கொள்ளக் கூடாதவையாகும். அளிப்பதா, வேண்டாமா என்ற கட்டம் போய் அளித்தே தீரவேண்டிய அவசிய கட்டம் வந்துற்றுவிட்டது முதலாளித்துவக் கொள்கைக்கு முடிசூட்ட நினைக்கும் ஆங்கிலோ—அமெரிக்க வல்

[தொடர்ச்சி ..ம் பக்கம் பார்க்க]

Phone No. 4502 | விலை அணா ஒன்று | Regd. No. M. 5458 | [இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்தேடு)

மணி 1] சென்னை (3—12—49) ❀ வெளியூர் (4—12—49) [இதழ் 107

நேட்டாலில் இந்தியர்கள் வேலையில்லாத் திண்டாட்டம்

வாரத்தில் நூற்றுக்கணக்காக 'டிஸ்மிஸ்'!

டர்பன், டிச. 2—

நேட்டாலில் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் வேலையில்லாமல் தவிக்கின்றனர். இவர்கள் குடும்பங்கள் வறுமையால் வாடுகின்றன. இவர்கள் வாரத்தில் நூற்றுக்கணக்கான தங்கள் வேலைகளிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டு வருகின்றனர்.

பல தொழில்களில் அவர்களுக்கு இடம் கிடையாது என்று மறுக்கப்படுகிறது.

நேட்டால் இந்திய காங்கிரஸ் காரியதரிசி இது விஷயமாக குளோப் நிருபரிடம் கூறுகையில் நேட்டாலில் இந்தியர்களிடையே வறுமைநிலைமை அதிகரித்து வருகிறதென்றும், தொழில் இலாகா வேலையில்லாதார் என்று பதிவு செய்துள்ளவர்களைத் தவிர வேலையிழந்த இந்தியர்கள் 1000 பேர்களுக்கு மேற்பட்டு இருக்கின்றனர் என்றும் சில இந்திய யுவர்கள் காலேஜ் படிப்பு முடிந்தபின்பு வேலையில்லாமலேயே இருந்து வருகின்றனர் என்றும் கூறினர். அவர் மேலும் கூறுகையில்: நேட்டால மாகாணத்தில் 7000 இந்தியர்கள் இருக்கின்றனர் என்றும் இவர்களை விவசாயத்திற்கு திரும்பும்படி செய்யவேண்டும் என்று சர்க்காரிடம் கேட்கப்பட்டிருக்கிற தென்றும் தெரிவித்தார்.

அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் முஸ்தீபு!

வாஷிங்டன் டிச 3

அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகளின் வர்த்தக கப்பல்கள் போர்க்காலத்தில் ஒன்றாக பிரிட்டன், லண்டன், வாஷிங்டனிலிருந்து கண்ட்ரோல் செய்யப்படுவது பற்றிய பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

விண்ணையளாவும் உலோகக் கட்டிடங்கள்

அமெரிக்காவில் அமைக்கப்படும்

நியூயார்க், டிச, 2—

கல் மண், சிமெண்ட் இவைகளுக்குப் பதிலாக உலோகங்களினால் ஆகிய வானத்தை அளாவும் கட்டிடங்கள் அமெரிக்காவில் ஏற்படவிருக்கின்றன. இந்த உலோகத்தின் பெயர் 'கார்டன் வால்ஸ்' என்பதாம்.

இந்த உலோக வீடுகள் அதிக இடத்தை அடைத்துக் கொள்ளாது என்பதுடன் கட்ட அதிக செலவும் ஆகாதாம். —நளோப்

முஸ்லிம் உலகம் முழுநிற்கும் 'ஒரே மக்கள்ஸ்தாபனம்'

—;0:—

காலிக்குஸமானின் 'இஸ்லாமிஸ்தான்' கோட்பாடு விளக்கம்

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் தலைவர் சௌதரி காலிக்குஸமான் மத்திய கிழக்கு, பிரிட்டன் ஆகிய இடங்களிலெல்லாம் தனது சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு 29-ந்தேதி இரவு கராச்சி வந்தடைந்தார். உலக முஸ்லிம் நாடுகளனைத்தையும் 'இஸ்லாமிஸ்தான்' என்ற பெயரில் இறுக இணைக்க வேண்டுமென்ற தனது கொள்கைக்கு ஆதரவு எவ்வளவு தூரமிருக்கிறதென்பதைக் கண்டறியவே இவர் நாடுகள் பல சுற்றி, இப்போது கராச்சி திரும்பியுள்ளார். தனது கொள்கைக்கு ஒருமித்த ஆதரவு முஸ்லிம் நாடுகளனைத்திலும் கிடைத்திருக்கிறதென அவர் குறிப்பிட்டார்.

முஸ்லிம் உலகம் முழுவதற்கும் ஒரே மக்கள் ஸ்தாபனம் அமைந்தாகவேண்டிய பரிபக்குவ காலம் கிட்டிவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கதிரவன் வெப்ப சக்தியைக் கொண்டு மோட்டார் இயக்கலாம்!

அணுசக்தியையும் விஞ்சுமெனக் கண்டுபிடிப்பு!

நியூயார்க், டிச. 2—

மனிதனால் உற்பத்தி செய்யப்படும் அணுசக்தியினால் ஓட்டுவதை விட சூரியக் கிரண சக்தியைக் கொண்டு மோட்டார்கார்களை ஓட்டலாம் என்பதை ஜெனரல் மோட்டார் லாபரேட்டரிகளில் வேலை செய்யும் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர்.

இப்பொழுதுள்ள பிரச்னை எல்லாம் சூரியக்கிரணத்தை எப்படி சேகரித்து உபயோகிப்பது என்பது தான்.

ஒரு நாளைக்கு ஒரு ஏக்கர் பூமியில் விழும் சூரியக் கிரணம் 700 காலன் காஸோலினுக்குச் சமமானதென்றும் இதைக்கொண்டு ஒரு ஆண்டு காலத்திற்கு ஒரு மோட்டாரை ஓட்டலாம் என்றும் ரசாயன இலாகாத் தலைவர் காம்பெல் கூறுகிறார்.

பச்சை தாவரவர்க்கங்கள் சூரியக் கிரணத்தைப் போதிய அளவுக்கு ஆகர்ஷிக்கிறதென்றும். அவைகளிலிருந்து உஷ்ணத்தை 'ஸ்டாக்' செய்ய வழி கண்டுபிடிக்கவேண்டும் என்றும் இம்முறையில் மின்சார சக்தியைப் பெறுவதற்கு வழிதேட குறைந்தது பத்து ஆண்டுபிடிக்கும் என்றும் அவர் கூறினார்.

நகரும் பாடசாலை

பாக்தாத், டிச. 1—

ஒரு மோட்டாரில் ஆசிரியர்களை ஏற்றி கல்வி போதனைக் கருவிகள் எல்லாம் அமைத்து கிராமங்கள் தோறும் சென்று மக்களுக்கு கல்வி தர ஒரு திட்டத்தை இராக் சர்க்கார் தயாரித்திருக்கிறது.

இம் முறை பரிசோதனையில் மிக வெற்றிகரமாக கையாளப்பட்டு வருகிறதாம்.

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் கலைக்கப்படும்?

லண்டன், டிச. 1—

இந்திய புது அரசியல் நடைமுறை சம்பந்தமான மசோதா ஒன்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் நிறைவேற இருக்கிறது. இது ஜனவரி 26-க்குள் நிறைவேற்றப்பட வேண்டும். இதில் சிக்கல் ஏதும் இல்லாததால் இதை ஜனவரி முதல் வாரத்தில் எடுத்துக்கொள்ள சபை தீர்மானித்திருக்கிறது. இது நிறைவேறியபின் அநேகமாக பிரிட்டிஷ் பார்லிமெண்டு கலைக்கப்பட்டுவிடலாம். —ஞரோப்

மாலை மணி

சென்னை 3—12—49 சனிக்கிழமை

உண்மையில் நாட்டமிருந்தால் உடனே நிறைவேற்றுங்கள்!

ஏறு! முன்னேறு!!

தூய்மையான எண்ணம்—நீதியான முறை- நேர்மையான போக்கு-நாணயமான ஒழுக்கம்—தன்னலம் மறுத்த உழைப்பு-பிறர் நலம் பேணும் பண்பு ஆகிய இவற்றிற்குக், கள்ளங்கவடு அற்ற நல்லறிவு படைத்தோரின் ஆதரவு என்றும் உண்டு என்பதற்கு எடுத்துக் காட்டாக, **திராவிட முன்னேற்றக் கழகம்** சென்ற இரண்டரைத் திங்கள்களாகப் புகழொளிவீசி, பெருமிதத்துடன் நின்று நிலவி வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் மலர ஆரம்பித்த நாள் முதல் மக்களின் நல்லெண்ணம்- உழைப்பாளர்களின் உணர்ச்சி வெள்ளம்-இளைஞர்களின் ஆதரவு-மாணவ உலகின் அன்பு-ஆராய்ந்துணரும் பேரறிவுடையோரின் அருந்துணை ஆகியவற்றைப் பரிசுகளாகப் பெற்று வருகிறது. எங்கணும் ஆதரவு! எங்கணும் அன்புமொழி! எங்கணும் உணர்ச்சிப் பெருக்கு! இவற்றிடையே **திராவிட முன்னேற்றக் கழகம்!**

உண்மைக்கு-உரிமைக்கு—உயரிய கொள்கைக்குப் பாடுபடும் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைப் பொதுமக்களும், கழகக் கொள்கைகளிடத்தே நம்பிக்கை பூண்டு, நடைமுறையில் கொண்டுவர, இடையறாப்பற்றுடன் விளங்கும் தோழர்களும் தெளிவாக உணர்ந்துவிட்டார்கள். லேபிள் அல்ல-சரக்கு தான் முக்கியம் என்பதை உறுதிப் படுத்தி விட்டார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம், ஏறத்தாழ முன்னூற்று ஐம்பது கிளைகளைத் தழைக்கச் செய்துவிட்டது. நாளுக்கு நாள் கிளைகள் தழைத்து வருகின்றன. குற்றமற்றக் கொள்கையை நாட்டிலே விதைத்திட, அரும்பாடுபடும் இன்னிசைப் பிரசாரக் குயில்கள், விதை கொள்வதற்கு ஏற்ற மரம் திராவிட முன்னேற்றக் கழகமே என்பதைக் கண்டறிந்து, கிளைகளிலே தங்கி, "வாழ்க வளமார் எமது திராவிடநாடு, வாழ்க வாழ்கவே!" என்று பாடிக் காட்டுகின்றன. அந்தப் பாட்டின் ஒலி, திராவிடப் பூம்பொழில் முழுவதும் பரவி நிற்கிறது. கிளைகளிலே பூத்துக் குலுங்கும் திட்டம் எனும் மலர்கள், கொள்கை மணத்தைக் கமழச் செய்கின்றன. திராவிடம் அதனால் இன்ப மணம் பெறுகிறது! திராவிடத்தை மணக்கமழும் பூம்பொழிலாக என்றென்றும் ஆக்க, மேலும் மேலும் மலர்கள் குலுங்க, திராவிட முன்னேற்ற கழகம் தழைக்க வேண்டும்!

சென்ற இரண்டரைத் திங்கள்களில் தி. மு. கழகத்தின் அரும்பணி வீரர்கள் ஆற்றியிருக்கும் தொண்டு,போற்றிப் போற்றி புகழத் தக்கது. ஆற்றியிருக்கும் தொண்டும் சிறப்புக்குரியது-ஆனால், ஆற்ற வேண்டிய தொண்டு ஏராளம் இருக்கின்றது. முன்னேற்றக் கழகத்தில், ஆர்வமுள்ளோர் அனைவரும் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டு வருகின்றனர்- ஆனால், பதிவு செய்யப்பட வேண்டியவர்கள் எண்ணற்றவர்கள். பதிவு ஆனவர்கள்-பதிவு ஆகவேண்டியவர்கள், இந்த இரண்டு எண்ணிக்கைகளுக்கும் இடையிலே இருக்கும் அளவு மிகப் பெரிது. அதை மனதிலிறுத்திக்கொண்டு, உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் முன்னேற்றக் கழகத் தோழர்கள், சற்றுத்தீவிரமாக இறங்க வேண்டும்.

டிசம்பர் திங்கள் இறுதிக்குள் சுமார் 500 கிளைக் கழகங்களையும், 50,000 உறுப்பினர்களையும் கொண்ட அளவினதாக திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கக் கழகத் தொண்டர்கள் அனைவரும் பாடுபட வேண்டுகிறோம்.

டிசம்பர் திங்கள் இறுதிக்குள் மாவட்டக் கழகங்கள் அனைத்தையும் உருவாக்கி, மாகாண செயற்குழுவினை உருக்கொள்ளும்படி செய்ய வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம்-கண்ணியத்திற்கு இருப்பிடம்-நேர்மைக்கு இருப்பிடம் என்பதைக் கழகத் தோழர்கள் அனைவரும் நிலைநாட்ட வேண்டும். அதுவே கழகக் கட்டுப்பாட்டின் முக்கிய குறிக்கோள்.

பொதுவாழ்வைச் செப்பனிட எனறே முன்வந்துள்ள முன்னேற்றக கழகத்தினர் முன், ஏமாற்றம் அடைந்தோர் ஆத்திரத்தால, பொறுமையைக் ககுவர்; வயிற்றெரிச்சலைக் கொட்டுவர்; தூற்றலை வீசுவர்; துடிதுடிப்பைக காட்டுவா; இழித்துக கூறுவர்; இல்லாததை யெல்லாம புனைந்துரைப்பர்; பொய் புகல்வா; பொல்லாங்கு சொல்லுவர்; இன்னும் இன்னதுதான் சொல்லுகிறோம் எனறு தெரியாமல் ஏதேதோ உளறுவர்; அவற்றிலே உள்ள முரண்பாடு அவர்களுக்கே தெரியாது; ஆத்திரம் அந்த அளவுக்குக் கண்ணை மறைக்கும். அவை அனைத்தையும் பொறுமை என்னும் திடந்தோள்களால், உதறித் தள்ளிவிட்டு, செப்பனிடும் தொழிலைச் செவ்வனே செய்துபோக வேண்டும். அந்த அளவுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒவ்வொருவரும் தமமைத் தயாராக்கிக்கொண்டு, சலியா உள்ளத்துடன் கடமையை ஆற்றி முன்னேறுவீர்களாக! ஏறு! முன்னேறு!!

நாகரிகம் தழைக்க நங்கையர்க்கு உரிமை தாரீர்!

காலநிலை உணர்ந்து கடிதில் செயலாற்றுக!

இந்து மதச் சட்டத்தொகுப்பு மசோதா பற்றி அனைத்திந்திய மாதர் மாநாட்டுத் தீர்ப்பு

புதிதாக அமைக்கப்போகும் அரசியல், சமத்துவம், சுதந்திரம், நேர்மை, உள்ளம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட புதியசமுதாயத்தை உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமானால் இந்துமத சட்டத்தொகுப்பு மசோதா எத்தகைய தாமதமுமின்றி புதிய அரசியல் புத்தகத்தில் இடம் பெற்றாகவேண்டும்.

தற்போதுள்ள இந்து சமுதாயத்தின் நிலையை உற்று நோக்குவார்க்கு சமுதாயம் காலத்துக்கேற்றவாறு எப்படி முன்னேறுகிறது என்பதும், அதற்கேற்ப சமுதாயச் சீர்திருத்தச் சட்டம் அமைக்கப்பட வேண்டுவது எத்துணை அவசியம் என்பதும் தெளிவாகத் தெரியும்.

"ஐக்கிய நாடுகளிடையே இந்தியா எவ்வளவு உற்சாகத்தோடு பெண்களின் உரிமை பற்றி பேசிற்றோ அவ்வளவு உற்சாகத்தோடு அதனை நிலைநாட்ட முன்வரவேண்டும்,

இந்துமதச்சட்டத்தொகுப்பு மசோதாவால் "கடவுள் போச்சு!" மதம்போச்சு என்று சிலர் கூச்சல் போடுகிறார்கள். இது அவேசத்தின் பாற்பட்டதேயன்றி, பகுத்தறிவின் பாற்பட்டதல்ல.

தற்காலிக பார்லிமென்டாக இருக்கும் அ. நி. சபைக்கு இமமசோதாவைச்சட்டமாக்க உரிமையில்லை என்று சொல்லப்படுகிறது. அ. நி. சபையில் நாட்டுத் தேவையான அடிப்படைத்திட்டங்கள் தீட்டவே ஏற்படுத்தப் பட்டுள்ளது என்று சொல்லப்படுவதுஉண்மையானால் இந்துமத சட்டத் தொகுப்பு சோதாவை அச்சபை நிறைவேற்ற உரிமையில்லை என்று சொல்லுவதில் அர்த்தமேயில்லை."

இவை அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற அகில இந்திய மாதர் மாநாட்டுத் தீர்ப்புகள்.

இந்துமதச் சட்டத்தொகுப்பு மசோதாவை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும் வைதீகபுரியினருக்கு மாதர்கள் தருகின்ற இந்த நல்ல தீர்ப்புகளை அப்படியே அர்ப்பணம் செய்கிறோம்.

அவர்கள் கேட்கிறார்கள். சமத்துவம், சுதந்திரம், நேர்மை உண்மை ஆகியவை புத்தகத்தில் இடம் பெறவேண்டுமானால் உடனே இந்த மசோதாவை நிறைவேற்றுங்கள் என்று.

இதற்கு, நேர்மையாளர் என்று போற்றிப் புகழப்படுபவருமோ, அவரது தோழர்களான ஆட்சியாளரோ என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? ஒன்று மாதர்களின் தீர்ப்பை ஏற்று மசோதாவை நிறைவேற்ற வேண்டும்; அல்லது "எங்களுடைய எதிர்கால ஆட்சிமுறையில் சமத்துவம், சுதந்திரம், நேர்மை, உண்மை ஆகியவற்றுக்கு இடமிராது" என்றேனும் சொல்லியாக வேண்டும். என்ன செய்யப் போகிறார்களோ பார்ப்போம்.

அடுத்து, சமுதாயத்தின் தற்போதைய நிலையைச் சுட்டிக் காட்டி, இந்தியா ஐ. நா. வில் முழக்கம் செய்ததையும் எடுத்துக்காட்டி ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி என்ற நிலைமையை அகற்றுங்கள் என்று கேட்கின்றனர் அந்த மங்கையர் குழாத்தினர். பூவுலகிற்கு நீதி போதனை செய்யப் புறப்பட்டிருக்கும் புண்ணியவான்கள் இந்தப் பூவையரின் கோரிக்கைகளை எப்படி நிறைவேற்றப் போகின்றனரோ பார்ப்போம்.

மேலும். கடவுள் போச்சு, மதம் போச்சு என்று ஆர்ப்பாட்டம் செய்யும் வைதிகபுரியினர் பார்த்து 'உங்கள் செயல் பகுத்தறிவின் பாற்பட்டதல்ல' என்று வெளிப்படையாக பேசுகின்றனர். இது சுயமரியாதைக்காரர்கள் பேச வேண்டிய பேச்சு. அந்த வேலையை மாதர்களே மேற்கொண்டது பற்றி மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். அவர்களுடைய உள்ளத்தில் இத்தகைய புரட்சிப் புயல் வீசுவதுகண்டு பூரிப்படைகிறோம். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறோம். வைதீகபுரியினர் வனிதயரின் இந்த தீர்ப்புக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்களோ?

கடைசியாக, அ. நி. சபையின் அடிப்படைக் கொள்கை என்ன என்று கடாவுகின்றனர் அந்தக் காரிகைகள். இந்துமதச சட்டத் தொகுப்பு மசோதாவை நிறைவேற்றக் கடமைப்பட்ட அ. நி. சபைதனக்கு உரிமையில்லை என்று தகாத காரணங்கூறி தட்டிக்கழிக்கப் பார்ப்பதைக் கண்டு மாதர் மாநாட்டினர் தலைவர்களைத் தட்டிக் கேட்கின்றனர், அடிப்படைத்திட்டங்கள் அனைத்தையும் தயாரிக்கவேண்டிய அ. நி. சபை இந்த மசோதாவை மட்டும் தட்டிக் கழிப்பானேன் என்று. ஆளவந்தார்கள் இதற்கு என்ன சமாதானம் சொல்லப் போகிறார்கள் என்று கேட்கிறோம்.

நாம் பலமாகச் சுட்டிக்காட்டி வரும் குறைச்சாட்டுகளை புதுடில்லி மாதர் மாநாடு தெளிவுற எடுத்துக்காட்டிவிட்டது. எனவே, மேலும் இதுபற்றிநாம் கூறத்தேவையில்லை. பெண்டிரே முன்வந்து இம்மசோதாவை நிறைவேற்றும்படி அரசியலாருக்கு அறிவுறுத்துகிறார்களென்றால், நாடு எவ்வளவு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை ஆளவந்தார்களே சிந்தித்துப்பார்க்கட்டும்.

ஜிப்ரால்டரை யொத்ததொரு தளம் அமைக்க முயற்சி

மத்தியதரைக் கடல் பகுதியில் ரஷ்யா நாட்டம்

லண்டன், டிச. 1—

ஆல்பேனியாவைச் சேர்ந்த ஸஸெனோ தீவை, ஜிப்ரால்டர் போல ஒரு பலமானத் தளமாக்க ரஷ்யா முனைந்து வருகிறதென்று தெரியவருகிறது.

இந்தத்தளத்தைக் கொண்டு எட்ரியாடிக் பகுதியில், தன் ஆதிக்கத்தைப் பலப்படுத்த ரஷ்யா முயலுமெனத் தெரிகிறதென்று 'குளோப்' செய்தி நிலையம் கூறுகிறது.

டிட்டோவின் உதவியை நாடுவதாகக் கூறப்பட்ட ஆல்பேனியப் பிரதமர், இப்பொழுது ரஷ்யாவின் உதவியை நாடுவதாகத் தெரிய வருகிறது.

துப்பறியும் போலீசுக்குப் 'பெருந் தலைவலி'

டெல்லி டிஸ்ட்ரிக்ட் கோர்ட்களில் ஜூனியர் கிளார்க்குகளை ஆள் குறைப்புத் திட்டத்தின் கீழ் வீட்டுக்கனுப்பிவிடுமாறு, கிழக்குப் பஞ்சாப் உயர்நீதி மன்ற ரிஜிஸ்டிராரின் கையெழுத்திட்ட உத்தரவொன்று,டெல்லி பிரதம கமிஷனர் காரியாலயத்துக்கு வந்தது. கையெழுத்து சம்பந்த சம்சயத்துக்கும் இடமேற்படாவகையிலிருந்ததால், காரியாலய அதிகாரிகளும் கட்டளையை அப்படியே நிறைவேற்றிவிட்டனர்.

ஆனால், மேற்படி ரிஜிஸ்டிரார் அப்படி உத்தரவொன்றும் பிறப்பிக்கவில்லையெனப் பின்னர் தெரிய வந்தது. டெல்லி சர்வீசைச் சேர்ந்த இதர இலாக்காக்களுக்கும் இதுபோன்ற உத்தரவுகள் — ஆள்குறைப்புச் சட்டங்களை வலியுறுத்தி—வந்துள்ளனவென்று தெரிகிறது.

டெல்லி துப்பறியும் போலீசாருக்கு இது பெருந் 'தலைவலி' யாயிருக்கிறதாம். பொய்க் கையெழுத்திட்டு, இப்படி உத்தரவுகளை பிறப்பித்து வருவோர் யாரென்றுகண்டுபிடிப்பதில் பெருமுயற்சி செய்து வருகிறார்களாம்.

சமாதானத்தின் பெயரால் சாந்திநிகேதனத்தில் காந்திபஜனை!

:0:

உண்மைச் சமாதான அடிப்படை உணரா உலகமேதைகள் !

உருப்படுமா இந்த நாடு !

“சத்தியம், அகிம்சை, தத்துவங்களைத் தனிப்பட்ட மனிதரின் வாழ்க்கையிலிருந்து பொது வாழ்க்கையிலும் இடம் பெறும்படி செய்தவர் காந்திஜி. இது அவர் புரிந்த அரிய சேவையாகும். ஆனால் இதை சாதிக்க பயிற்சி அதிகம் வேண்டும். தனி மனிதர் ஒவ்வொருவரின் முயற்சியும் அவரவருக்குச் சாந்தியளிக்கலாம்; அவரது மனச் சாந்தியைத் திருப்தி படுத்கலாம். ஆனால் சமுதாயத்தின் மன சாந்தியைத் திருப்பி தேசிய கொள்கைகளை உருவாக்கினாலொழிய பயனில்லை.”

என்று மேற்கு வங்க கவர்னர் டாக்டர் கட்ஜு அண்மையில் சாந்தி நிகேதனத்தில் நடைபெற்ற சமாதானப் பிரியர்கள் மாநாட்டில் பேசியிருக்கிறார்.

சத்தியம் அகிம்சை என்பதெல்லாம் தனிப்பட்ட மனிதரோடு நின்றுவிடக்கூடிய தத்துவங்களல்ல; பொது வாழ்விலும் அவை இடம் அளிக்கவேண்டும் என்று கருதுகிறார்.

தோழர் கட்ஜுவின் இந்தக் கருத்தை நாம் வரவேற்கிறோம். உண்மையிலேயே உலகில் சமாதானம் நிலவவேண்டுமானால் அதுவும் தனிப்பட்ட மனிதரின் நலனுக்கென்று இராமல் பொது நலனைக் குறிக்கோளாகக் கொண்டே அமைய வேண்டும். இவ்வனம் பொதுத் தன்மையாகக் கருதப்பட வேண்டியவை சத்தியமும் அகிம்சையும் மாத்திரமே என்று சாந்த நிகேதனத்தில் கூடிய சமாதானப் பிரியர்கள் கருதுகிறார்கள். ஆனால் நமது கருத்து அதுவல்ல. சத்தியம், அகிம்சை என்பதெல்லாம் நடைமுறையில் பயனளிக்க வேண்டுமானால் அவற்றுக்கு அடிப்படையாகத் தேவைப்படுவது நல்வாழ்வு. மக்களுக்கு ஏற்பட வேண்டும். நல்வாழ்வு பெறாத சமுதாயமோ நாடோ சத்தியம் அகிம்சை ஆகியவற்றைக் கடைபிடிப்பது கடினம்.

“கொந்தளிப்பில் நல்லதொரு கொள்கை முளைப்பதெங்கே” என்றார் நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அதுபோல் மக்களிடையே வறுமை, பிணி, உயர்வு, தாழ்வு என்ற பேதம், அநியாயம் முதலிய கொந்தளிப்புகள் இருக்கும்போது அகிம்சை, சத்தியம் என்னும் அழகிய கொள்கைகள் எவ்வனம் முளைக்க முடியும்?

எனவே, முதலில் வேண்டப்படுவது நல்வாழ்வு; அதற்கு அடிப்படை பொருளாதாரசமத்துவம், சமுதாயசமத்துவம். இவற்றை அடையயார் உண்மையாக பாடுபடுகிறார்களோ அவர்களே உண்மையான சமாதானப் பிரியர்களாவர். அதை விடுத்து வெள்ளையருக்குச் சமாதானப் பிரியர்கள் என்று சொல்லிக்கொண்டு அப்படிப்பட்டவர்கள் ஒரு மகாநாடு கூடி அதில் காந்தியாரின் புகழ் பாடிவிடுவதால் மாத்திரம் என்ன பயன் விளையும்?

ஆகவே சாந்திநிகேதனத்தில் கூடிய மாநாடு உண்மையிலேயே சமாதானம் விரும்புவோர்களால் கூட்டப்பட்ட மாநாடு என்று நாம் நினைக்கவில்லை. ஒரு நல்லுபதேசம் செய்வதன் மூலம் தம்மை விளம்பரப் படுத்தி கொள்ளவே இவர்கள் கூடினார்கள் போலும்! அதுமட்டுமல்ல கடந்த நிலநாட்களுக்கு முன்னர் கல்கத்தாவில் அகில இந்திய தொழிற்சங்கக் காங்கிரசால் உலக சமாதான மாநாடு ஒன்று கூட்டப்பட்டது, வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அந்த மாநாட்டாருக்கு இந்திய அரசியலார் எத்துணை இடையூறுகள் விளைத்தனர் என்பதும், இன்று சமாதானப் பிரியர்கள் என்று தம்மைப் பறை சாற்றிக் கொள்வோரே என்று அந்த சமாதான மாநாட்டை அலட்சியப்படுத்தினர் என்பதும் நாம் அறிந்த விஷயமே.

அந்த சமாதான மாநாட்டுக்கு வர சோவியத் பிரதிநிதிகளுக்கும் வியட்நாம் பிரதிநிதிகளுக்கும் அனுமதி அளிக்கவில்லை இந்திய சர்க்கார். அது மட்டுமின்றி அடக்குமுறை, இருட்டடிப்பு முதலியன வழக்கம்போல் நடைபெற்றிருக்கின்றன. அன்று சமாதானத்துக்கு இவ்வாறெல்லாம் அல்லல் தந்த அரசியலாரும், அவர்கள் ஆதரவாளர்களுமே இம்மாநாட்டை நடத்தினர் என்றால் முன்னிய மாநாட்டுக்கு இஃதோர் போட்டி மாநாடென்று சொல்வதைத் தவிர வேறென்ன சொல்வது?

முன்னர் அகில இந்திய காங்கிரசால் கூட்டப்பட்ட மாநாடு நாம் மேலே குறிப்பிட்டதுபோல் மக்களுக்கு அரசியல், பொருளாதார, சமத்துவம் வழங்குவது எப்படி என்ற சமாதானத்தின் அடிப்படைத் தத்துவத்தை ஆராய கூட்டப்பட்ட மாநாடு. அப்படிப்பட்ட ஒரு மாநாட்டுக்கு ஆதரவோ, விளம்பரமோ தரவில்லை இந்த அரசு. ஆனால் வித்தலாட்டப் பிரியர்களுக்கு போதுத்த அளவில் ஆதரவும் விளம்பரமும் தரப்படுகிறது, என்றால் இந்த நாடு உருப்படுமா, நீங்களே சொல்லுங்கள்

விவசாயிகட்கு ‘ரொக்க உதவி’

விவசாயிகட்கு ‘ரொக்க உதவிகள்’ தருவதும் முறையைச் சென்னை சர்க்கார் தொடர்ந்து மேற்கொண்டு வருவரென உணவு உற்பத்தி கமிஷனர் காரியதரிசி தெரிவித்துள்ளார். சென்னை சர்க்கார் மேற்கொண்டு வரும் இம்முறையை இந்திய சர்க்கார் ஆமோதித்துவிட்டனரென்றும் அவர் குறிப்பிட்டனர்.

மக்கள் கருத்தை மதியாக் கும்பல்கள்

“சீனாவின் சமீபகால சரித்திரத்தை ஒரு உள்நாட்டுப்போர் என்று சொல்வதைவிட, ஒரு பெரிய புரட்சியென்று அழைப்பதே பொருந்தும். மிகப் பெருவாரியான சீனமக்கள் ஒற்றுமையான முயற்சியில்லாமல் இத்தகைய ஒரு புரட்சி விளைவது சாத்தியமல்ல. இறுதியாக, இது சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு வெற்றியாக முடிந்திருக்கிற தென்றால், இதற்கு அவர்களுடைய பலமோ அல்லது கோட்பாட்டின் கவர்ச்சியோ மட்டும் காரணமாகி விடாது. அதைவிட கோமிண்டாங் கும்பல் இவ்வளவு நாளும் ஒடு கண்மூடித்தனமான வேலை முறையைக் கையாண்டு வந்திருப்பதே இன்னும் முக்கிய காரணமாகும். ஜனநாயக சக்திகளுக்கு ஆக்கமளிப்பதுபற்றி அவர்கள் சிறிது கவலை கொண்டதில்லை. மக்களின்பொருளாதார அல்லலைத் தணிக்கவும் அவர்கள் உருவான முயற்சியெதுவும் செய்ததுகிடையாது. அதற்கு மாறாக தங்கள் யதேச்சாதிகாரத்தை மேன்மேலும் வலுப்படுத்திக்கொள்வ தொன்றிலேயே அவர்கள் அக்கரை காட்டி வந்திருக்கின்றனர். இந்த விபரீத ஆட்சி முறை மீது, ஜனங்களிடை நாளுக்கு நாள்வெறுப்பு வளர்ந்து, இப்போது கோமிண்டாங் சர்க்காருக்குஇறுதியாக வெடிவைத்துவிட்டது. மக்கள் கருத்தை மதியாமல் ஆதிக்கம் செலுத்த எண்ணும் கும்பல்கள், எங்கிருந்த போதிலும் அவைகளுக்கு கோமிண்டாங்கின் கதி ஒரு தெளிவான படிப்பினையாகும்.” —சு. மி.

பாவ்டே சர்க்காரிடம் அதிகாரம் மாறும்

மால்கம் மாக்டனால்டு தகவல்

சிங்கப்பூர், டிச. 1—

பாவ்டே சர்க்காருக்கு அதிகாரத்தை பிரெஞ்சு சர்க்கார் மாற்றிவிடும் என்று எதிர்பார்க்கத் தக்க காரணங்கள் இருக்கின்றனவென்று, இந்தோ சீனாவிலிருந்து இங்கு வந்து சேர்ந்துள்ள, கமிஷனர் ஜெனரல் மால்கம் மாக்டனால்டு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:— இதற்கான பேச்சுவார்த்தைகளை வியட்நாம் தலைவர்களுடன் பிரான்ஸ் நடத்திவருகிறது. இதில் எவ்வளவோ பிரச்னைகள் இருக்கின்றன. வியட்நாம், கம்போடியா, லாவோஸ் இம் மூன்றின் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி பேசித்து, ஒரு முடிவுக்கு வரவேண்டும். இம்மாநாடு சீக்கிரமே நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

ராணுவமுறையில் இந்தோசீன பிரச்னையைத் தீர்க்க முடியாது என்பதை இந்தோசீன அதிகாரிகள் எல்லாருமே அறிந்திருக்கின்றனர். அதனால் தான், சமரசப் பேச்சு வார்த்தைகள் மூலமாக நடத்தப் படவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

4–12–49

கும்பகோணம்:—	சி. என். அண்ணாத்துரை, ஈ. வெ. கி. சம்பத், பி. பழனிச்சாமி, வி. சின்னத்தம்பி, கே. கே. நீலமேகம்.
கிருஷ்ணாம்பேட்டை (சென்னை):-	கே. அன்பழகன், சி. பி. சிற்றரசு, என். ஜீவரத்தினம், என். வி. நடராசன்.
சக்கம்பட்டி :—	எம். எஸ். இராமசாமி.
மதுரை :—	இரா. நெடுஞ்செழியன், எஸ். உத்தண்டன், எம். எம். அய்யாசாமி.
எட்டையபுரம் :—	கே. வி. கே. சாமி, சே. அருணாசலம், கலிங்கன்.

5–12–49

திண்டிவனம் :	சி. என். அண்ணாத்துரை.

பருத்திக்கு மாற்றுப் பொருள்கள் ஆராய்ச்சி

புதுடில்லி, டிச. 1—

பருத்திக்குப் பதிலாக என்ன பொருள்களை உபயோகிக்கலாம் என்பது குறித்து ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

புல், வேர்க்கடலைதோல், கரும்பு சக்கை இவைகள் நாட்டில் ஏராளமாகக் கிடைப்பதால், இவைகளைக் கொண்டு ஏதாவது செய்யமுடியுமா, என்று பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

இங்கு இந்த ஆராய்ச்சிக்குவேண்டிய தக்க இயந்திரசாதனங்கள் இல்லாததால், இந்த ஆராய்ச்சிகளைப் பிரிட்டனில் நடத்த வேண்டியிருக்கிறது. மரத்திலிருந்து பருத்தி தயாரிக்க முடியும் என்றும், ஆனால் மரம் இந்த நாட்டில் தேவையாக இருப்பதால், அதிலிருந்து பருத்தி தயாரிக்க உத்தேசம் இல்லை என்று இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள கம்பெனியின் அதிகாரி ஒருவர் கூறினர்.

செயற்கை பருத்தியை ஒரு தொழிற்சாலை 100000 பேல்களை தயாரிக்கமுடியும் என்றும், இம்மாதிரி 13-தொழிற்சாலைகள் ஏற்பட்டால் இந்தியாவின் பருத்தித் தேவை நிறைவாகிவிடும் என்றும் கூறப்படுகிறது. — ஞனோப்

யு. எஸ். ஸில் பயிர் இன்சூரன்ஸ் திட்டம்

நியூயார்க், டிச. 2—

பயிர் இன்சூரன்ஸ் திட்டம் பரீட்சார்த்தமாக எடுத்துக் கொண்டது வெற்றிபெற்றிருப்பதால், அத்திட்டத்தை விரிவுபடுத்த யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார் தீர்மானித்திருக்கிறது.

பயிர்களுக்கு சேதம் ஏற்படாமல் தடுக்கவும், அப்படி வெள்ளம், பூச்சி முதலியவைகளால் ஏற்படும் சேதத்திற்கு விவசாயிகளுக்கு நஷ்டஈடு அளிக்கவுமே இத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டு 170,000 விவசாயிகள் தங்கள் பயிர்களை இன்ஷூர் செய்திருக்கின்றனர். — ஞனோப்

தோழர் பி. ஏ. மூர்த்தி வெற்றி பெற்றார்.

சிந்தாதிரிப் பேட்டை தேர்தல் முடிவு

சென்னை. டிச. 1—

சென்னை நகராண்மைக் கழகத்துக்கு சிந்தாதிரிப் பேட்டைப் பகுதியிலிருந்து தோழர் பி. ஏ. மூர்த்தி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்று மாலை 7 மணிக்கு ரிப்பன் கட்டிடத்தில் கமிஷனர் தோழர் ஈரம்மம் வோட்டுகளைக் கணக்கெடுத்தார். அதன் விவரம் பின் வருமாறு.—

பி. ஏ மூர்த்தி	470	ஓட்
டி. ஜி. லட்சுமணசாமி	421	”
என். வேணுகோபால்	371	”
ஏ. கிருஷ்ணசாமி மேஸ்திரி	297	”
செல்லுபடியாகாதது	1	”

வெற்றி பெற்ற தோழர் பி. ஏ. மூர்த்திக்கு மக்கள் மாலை சூட்டி வரவேற்றனர்.

தோழர் மூர்த்தி வெற்றி பெற்றது இது இரண்டாவது முறையாகும். கடந்த தேர்தலில் வெற்றி பெற்ற இவரது தேர்தல் செல்லுபடியாகாதென்று ஹைகோர்ட் மன்றம் தீர்ப்பு கூறியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

புதுமை இலக்கியம்

முற்போக்குஇலக்கிய மாதப் பத்திரிகை

தமிழ்நாட்டின் இலக்கிய உலகிலே ஒரு புரட்சியை ஏற்படுத்தப் புதுமை இலக்கியம் வருகிறது.

டிசம்பர் முதல்வாரம் வெளிவருகிறது

96 பக்கங்கள் விலை 0-6-0

—: விவரங்களுக்கு :—

233, லிங்கிச்செட்டித் தெரு. சென்னை-1.

கல்லறை நோக்கிற்று...

[1 பக்கம் தொடர்ச்சி]

லரசுகள் வேண்டுமானாலும் சிலகாலத்துக்குத் தயங்கலாம், அங்கீகாரம் நல்க. ஆனால், சீனாவுக்கு அண்டைநாடாகிய இந்தியா, எல்லா வகையிலும் அதோடு ஒத்துப்போகவேண்டிய நிலையிலுள்ள இந்தியாவும் முதலாளித்துவ முகாமோட இணைந்து நின்று, கம்யூனிஸ்ட் சீனாவை அலட்சியபடுத்திவருமேல், அது எந்த வகையிலும் அறிவுடைமையாகாது; அதற்கு மாறாக, முதலாளித்வ போதையிலேயேமேலும்மேலு மிருககபிரியபடுகிறதென்றுதான் பொருள்படும்.

சீனா முற்றிலும் சிவப்பாகி வருவதையொட்டி, இப்போது இந்தியாவுக்கு இரட்டைப் பொறுப்பு வந்துள்ளதென்பதையும் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறோம். ஒன்று. கம்யூனிஸ்ட் சீனாவுக்கு அங்கீகாரமளிக்கும் பிரச்னை; மற்றொன்று திபேத் பிரச்னை சீனாவில் தனது ஆதிக்கம் சிதறடிக்கப்பட்டுவிட்டதைக் கண்ட அமெரிக்கா, இப்போது திபேத் பக்கம் கண் வீச்சு நடத்தியுள்ளது, 'நியூ டைம்ஸ்' எடுத்துக் காட்டியிருப்பது போல், திபேத்தைத்தனக்கான 'இராணுவத் தளமாக்கிக்கொள்ள அமெரிக்க முதலாளித்துவம் பெரு முயற்சி செய்து வருகிறது. பிரிட்டனும் பக்க உதவியாயிருந்து வருகிறது. இந்நிலையிலும், இந்தியா ஆங்கிலோ- அமெரிக்கரின் 'கைப்பாவை'யாயிருக்குமானால், வருங்கால வரலாற்றில் இழிவைத்தான் தேடிக்கொள்ளுமென எச்சரிக்கிறோம்.

திபேத்தின்பூகோள அமைப்பும், வரலாற்றுண்மையும் தெரிந்தோர், அதனை ஐரோப்பிய வல்லரசுகளுக்குக் காட்டிக்கொடுக்க ஒருக்காலும் ஒருப்படார். சீனாவின் எல்லைக்கோட்டையொட்டியுள்ள, நான்கு நாடுகளுள் ஒன்றாகும் திபேத், நேபாளம், இந்தியா, இந்தோ-சீனா ஆகியவை இதர மூன்று நாடுகளாகும். சீனக் குடியரசுக்குள் முழு அதிகாரமும் பெற்றுத் திகழும் பகுதியாக, திபேத் பலகாலமாகவே உரிமை கொண்டாடப்பெற்று வந்திருப்பதை வரலாறு தெரிந்தோர் நன்குணர்வர். ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் தனக்கு அங்கீகாரமளித்தாலும் அளிக்காவிட்டாலும், திபேத் விஷயத்தில் எவ்வளவு தீவிர முஸ்திபுகள் செய்தாலும், சீனாவில்வெற்றிக் காடி நாட்டி வரும் கம்யூனிஸ்ட் படையினர், திபேத்தையும் வெகு எளிதில் ஆதிக்கப்படுத்திக்கொள்ளப்போவது உறுதி. கம்யூனிஸ்ட் சீனாவுடன் திபேத் இணைக்கப்பட்டுவிட்டது, என்று இப்போதே கூறிவிடும் தகைமையில் நிலைமை சாதகமாகி வருகிறது கம்யூனிஸ்ட்களுக்கு. திபேத் சிவப்பானால், அடுத்த 'ஆபத்து' இந்தியாவுக்குத்தான் என்ற நிலையிலும், இந்திய எல்லையைப் பாதுகாத்து வரவேண்டிய இன்றியமையாமை வந்துவிட்ட நிலையிலும், வீராப்புடன் 'வல்லரசுகளுக்கு ஜே!' போட்டு வருவது எந்த வகையிலும் பொருத்தமும்தகுதியுமாகாது

இந்தியாவின் வடகிழக்கு எல்லையைப் பத்திரப் படுத்திக்கொள்ள இந்தியா விழைகிறது, ஏற்பாடுகள்பலபுரிகிறதென்பது அஸ்ஸாமுக்கு அண்மையில் கவர்னர்—ஜெனரல் ஆச்சாரியார் வருகை தந்து, அவ்வட்டார மக்களை உற்சாகப்படுத்தியதிலிருந்தும் வெளி நாட்டுவிவகார இலாகா உதவி மந்திரி இரண்டு வாரத்துக்கு முன்பு அஸ்ஸாம் பகுதியில் சுற்றுப் பயணஞ் செய்ததிலிருந்தும் தெரிகிற தென்றாலும், கம்யூனிஸ்ட் சீனா விவகாரத்தில் சுமுகமாகப் போக வேண்டுமென்ற நல்லெண்ணம் மட்டும் இல்லாததேனோ வென்று கேட்கிறோம்.

இந்தியா விரைந்து கம்யூனிஸ்ட் சீனாவுக்கு அங்கீகாரம் அளித்துவிட்டால், அதனால் ஐ. நா. சபையில் பரபரப்பு நேரிடுமே யென்று கூறுகிறது நேரு சர்க்காரென்றால், முதலாளித்துவ நாடுகள் சார்பில்தான் நின்று பேசுகிறதென்பது புலப்படவில்லையா! வல்லரசுகளின்கூட்டுறவில்லை, சுயேச்சையாக எதுவும் செய்ய முடியுமென்றால், ஐ. நா. வில் அங்கம் வகிக்கும் ரஷ்யா அங்கீகரித்துவிட்ட சீனாவை, இந்தியா மட்டும் அங்கிகரிக்கத் தயங்குவதேன்? சுதந்தர ஆதிபத்தியக் குடியரசு'க்கு இது முடியாத காரியமா? அதுவும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல், சிவப்பாகக் காட்சியளிக்கும் கம்யூனிஸ்ட் சீனாவிஷயத்தில், பிறபோக்கு சக்திகள் துப்பற துடைக்கப் பெற்றுவிட்ட சீனா விஷயத்தில் இயலாத காரியமா வென்று கேட்கிறோம். வல்லரசுகள் அதி தீவிரமாக மோதிக்கொள்ளப் போகும் இந்நெருக்கடி கட்டத்தில் இந்தியா கையாளப் போகும் கொள்கையைத்தான் பொறுத்திருக்கிறது அதன் எதிர்காலம் என்று கூறி இதனை முடிக்கிறோம்.

தியாகிகளுக்கு!

இந்திய சுதந்தரப் போராட்டத்தில் கலந்துகொண்டோர் தாங்கள் செய்த தியாகங்கள் பற்றிய திருப்பித்திருப்பி பேசிக்கொண்டிருப்பரேல், வெகு விரைவில் கடன்காரர்கள்போல் செல்வாக்கிழப்பரென்பது நிசசயம்.

—சி. ராஜகோபாலாச்சாரியார், பூரி, டிச. 1.

மூடுவதாக இல்லை 'திறக்கப்போகிறோம்!'

சிக்கன முறையை அனுசரித்து, வெளிநாடுகளிலுள்ள இந்திய அரசப் பிரதிநிதி காரியாலயங்கள் இரண்டொன்றை மூட சர்க்காரேதுவும் இட்டமிட்டுள்ளதாவென்று டிச. 1-ந் தேதியன்று மத்திய சட்டசபையில் கேட்கப்பட்ட கேள்விபொன்றுக்குப் பதிலளித்த பண்டித நேரு, காரியாலயம் எதையும் மூட உத்தேசமில்லை யென்றும், ஆனால் அபிசீனியாவுக்குப் புதிதாக ஒரு அரசப் பிரதிநிதியை நியமித்து அனுப்பவே ஏற்பாடு செய்யப்படுகிறதென்றும் குறிப்பிட்டார்.

பொதுக் கூட்டம்

சென்னை, திருவட்டிஸ்வரன்பேட்டை தி. மு. கழகப்பொதுக் கூட்டம் 4-12-49 ஞாயிறு மாலை 5-மணியளவில், பி. பி. ரோடுச் சந்தில் நடைபெறும்.

அதுபோது, தோழர்கள் கே. அன்பழகன் எம். ஏ; என். ஜீவரத்தினம் எம். சி; என். வி. நடராசன், சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்,

இனி நடப்பவை

வாணியம்பாடி— வாணியம்பாடி பிராச் செடியூல்காஸ்ட் பெடரேஷன் ஆண்டுவிழா 4-12-49 ல் ஞாயிறு அன்று கோவிந்தபுரத்தில் நடைபெறும். வ. ஆ. பெடரேஷன் தலைவர் தோழர் எம். ஆதிமூலம் தலைமை வகிப்பார், துரைஏரி, திருமாஞ்சோலை, கோணியமேடு, ஆம்பூர் பேட்டை, கட்டைமேடு ஆகிய கிராமங்களில் முக்கியஸ்தர்களால் பெடரேஷன் கொடியேற்றுவிழா நடைபெறும். டாக்டர் அம்பேத்கார் உருவப் படத்தை நாமக்கல்தோழர் ஆர். பி. ராமசந்திரன் திறந்துவைப்பார் அன்றுமாலை 4. மணிக்கு வாணியம்பாடியில் ஓர் பொதுக்கூட்டம்நடைபெறும். தோழர் கே. எச். சாமி தலைமையில் தோழர்கள் எ. கிருஷ்ணசாமி எம். ஏ, அமலோர்பவம் பி. ஏ, ஆர். பி. ராமசந்திரன், ஆர். ஜார்ஜ், தெய்வசிகாமணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சென்னை—சென்னை ஓட்டேரி தி. மு. க. கிளையின் சார்பில் 4—12—49 ஞாயிறு காலை 10 மணிக்கு புலவர் வே. த. அச்சுதனார் அவர்களால் திருக்குறள் வகுப்பு நடத்தப்பெறும். இடம் 21, பிரிக்லின் ரோடு, ஓட்டேரி.

* * *

சென்னை—சென்னை குலை மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில், 4—12—49 ஞாயிறு காலை 10 மணிக்கு, குலை, வாத்தியார், கந்தப்பிள்ளைத்தெரு சரோஜினி மைச் கழகப்பள்ளியில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். அரசினர் கலைக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் தோழர் க. தங்கவேல் பி. ஓ. எல். (ஆனர்ஸ்) திருக்குறளில் "பயனில் சொல்லாமை" என்பதைப் பற்றி விரிவுரையாற்றுவர்.

* * *

சென்னை— தோழர் என். ஜீவரத்தினம் அவர்களின் தாயார் தனக்கோட்டியம்மையார் இயற்கை யெய்தியமை குறித்து. 4—12—49 ஞாயிறு காலை 8 மணிக்கு நீத்தார் கடன் நிறைவேற்றப்படும். தோழர்கள் கே. அன்பழகன், எம். கே. டி. சுப்பிரமணியம் ஆகியோர் 'நீத்தார் கடன்' என்பது பற்றி சொற்பொழிவாற்றுவர் இடம்: சூரியநாராயண செட்டித்தெரு, இராயபுரம்.

• • •

எட்டையபுரம்— இவ்வூர் தி. மு. க. கிளையின் பொதுக்கூட்டம், 4—12—49 ஞாயிறு மாலை 6 மணிக்கு, நடுவிற்பட்டி, முத்தாலம்மன் கோவில் மைதானத்தில் நடைபெறும். அதுபோது, தோழர்கள் கே. வி. கே. சாமி, செ. அருணாசலம், ஆகியோர் பேசுவார்கள். தோழர் கவிஞர் பாரதிதாசன் படத்தைத் திறந்து வைப்பார்.

• • •

சென்னை—13வது வட்டம் தி. மு. க. கிளை அமைப்புக்கூட்டம் 4—12—49 ஞாயிறு காலை 9 மணிக்கு விநாயகச்செட்டித்தெரு 81 என்னுள்ள கட்டிடத்தில் (மண்ணடிக்கு அருகில் நடைபெறும். கழக வளர்ச்சியில் கருத்துடைய அனைவரும் வருமாறு வேண்டப்படுகிறார்கள்.

* * *

தக்கோலம் இவ்வூர்திராவிடமுன்னேற்றக் கழகக்கிளையின் துவக்க விழா, 7-12-49 புதன் மாலை 5 மணிக்கு தோழர் வி. முனுசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ; கே. ஏ. மதியழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். ஒலிபெருக்கி உண்டு.

வெளிவருகிறது!

"புராக்ரஸ்"

திராவிடர் ஆங்கில வார வெளியீடு

ஆசிரியர் : C. N. அண்ணாத்துரை M.A.,

தனிப் பிரதி அணா 1. — வருடசந்தா ரூ. 3

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்ட்டுகள் தேவை

விவரங்கட்கு :—

"மாலை மணி" பதிப்பகம்,

சென்னை—1.

விஞ்ஞானத்தின் வேலை

பாலைவனத்தை வளங்கொழிக்கும் பிரதேசமாக்க முயற்சி!

—(0)—

சகாராப் பகுதிகளில் நீரூற்றமைப்புத்திட்டங்கள்

வாஷிங்டன், டிச 2—

அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்க இயந்திர சாதனங்களையும் யு. எஸ். பண உதவியையும்கொண்டு சகாரா பாலைவனத்தில் மிக ஆழமாகத் தோண்டி நீர் ஊற்றுகள் ஏற்படுத்தும் வேலையில் பிரெஞ்சு என்ஜினியர்கள் முனைந்திருக்கின்றனர்.

இந்தத் திட்டம் மூலம் மொராக்கோ அல்ஜீரியா டியூனிஸ் பாலைவனப் பகுதிகள் செழித்த நிலங்களாக ஆக முடியும்.

இந்தத் திட்டத்திற்கு உதவியாக 2,00000 டாலர் மதிப்புள்ள கிணறு தோண்டும் இயந்திரங்கள் இவ்வாண்டுயுனைடெட் ஸ்டேட்ஸ் அனுப்பிவைக்குமென்று தெரிகிறது.

சகாரா பகுதியில் நூற்றுக்கணக்கான இடங்களில் இம்மாதிரி ஊற்றுகள் ஏற்படுத்த முடியும், என்பதை பூகத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். மயூனிய பகுதியில் ஊற்றுகள் தோண்டும் வேலை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டதென்று 'குளோப்' செய்தி நிலையம் கூறுகிறது.

கூட்டுறவு சங்கப் பொருள்களின் கண்காட்சி

புதுடில்லி, டிச. 1—

அகில இந்திய ரீதியிலுள்ள கூட்டுறவு சங்கங்களின் பொருள்கள் கொண்ட கண்காட்சி ஒன்றை ஜனவரியில் புதுடில்லிக்கும் பழைய டில்லிக்குமிடையேயுள்ள பிரதேசத்தில் நடத்த, இந்திய கூட்டுறவுயூனியன் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இந்திய வர்த்தக மந்திரி கண்காட்சி டைரக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார். காஷ்மீர் பிரதமர் ஷேக்அப்துல்லா இக்கண்காட்சியைத் திறந்துவைப்பார். பண்டித நேரு ஆரம்பவிழாவில் கலந்து கொள்ளவிருக்கிறார்.

இந்திய விவசாய மாநாடு

இந்திய விவசாய மாநாடு சென்னையில் கிறிஸ்மஸ் வாரத்தில் டாக்டர் ராஜேந்திர பிரசாத் தலைமையில் நடை பெறுமென்று தெரிகிறது. அம்மாநாட்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியராக பொருளாதாரக் கல்வி துறைத் தலைவர் டாக்டர் எஸ். சந்திரசேகரும் மற்றும் பிறரும் கலந்துகொள்வரெனத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம்

இதுவரையில் தழைத்துள்ள கிளைகள்

334

ஏஜண்டுகள் தேவை

கீழ்க் கண்ட இடங்களுக்கு நமது 'மாலை மணி'யை விற்பனை செய்ய, முன்பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை.

1 கடயநல்லூர்
2 உதகை
3 காச்சிபுரம்
4 துவரங்குறிச்சி
5 அம்பாசமுத்திரம்
6 ஆலந்தூர் (இராமநாதபுரம் ஜில்லா)
7 பாப்பா நாடு
8 சென்னிமலை

மானேஜர்
"மாலை மணி" சென்னை

வரலாறு மறந்து வாழ்விழந்தான் திராவிடன்!

இமயத்தில் நாம் என்ற பெருமிதம் எங்கே போயிற்று?

நாடாண்ட பரம்பரையினர் இன்று நாடோடிகளாய்த் திரிகின்றனரே!

———(0)———

அறிவுப் பிரச்சாரம் செய்வதே மாணவர் ஆற்றவேண்டிய அரும்பணி

———(0)———

வேலூரில் மாணவர்களிடையே மதியழகன்

வேலூர், நவ. 28—

இவ்வூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் துவக்க விழா டவுன் ஹால் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது. மண்டபம் முழுதும் ஏராளமான மாணவர்களும், பொது மக்களும் குழுமியிருந்தனர். அமருவதற்கு இடமில்லாததால் மேடையின் இரு புறங்களிலும், கதவோரங்களிலெல்லாம் மக்கள் நின்றிருந்தனர், விழா சரியாக 5-30 மணிக்கு ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் தோழர் எம். சுப்பிரமணியம் அவர்கள் மாணவத் தோழர் சுகுண சங்கரன் அவர்களைத் தலைமை வகிக்குமாறு வேண்டிக் கொண்டார். பின்னர் தோழர் சுகுணசங்கரன் தலைமையேற்று திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் தோன்ற வேண்டிய அவசியம் குறித்தும், மாணவர்கள் அதன் பால்கொண்டிருக்கும் ஆர்வம் குறித்து விளக்கிக் கூறி, தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களை துவக்க விழா உரை ஆற்றும்படி வேண்டிக்கொண்டார். தோழர் கே. ஏ. மதியழகன் பேசு முன், நகர திராவிட முன்னேற்றக் கழகம் முதலிய பல கழகங்களின் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர் தோழர் மதியழகன் மாணவர் கழகத்தைத் திறந்துவைத்து ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:—"அன்புள்ள தலைவரவர்களே! தோழர்களே!! உங்கள் கழகத்தின் துவக்க விழாச் சொற்பொழிவாற்றும் வாய்ப்பை எனக்கு வழங்கியமைக்கு எனது மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த இரண்டு மாதங்களாக நாடெங்கும் மாணவர்கள் வதியும் இடமெல்லாம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகள் தோன்றிய வண்ணம் உள்ளன. இந்த ஆர்வம், தமிழகத்திற்கு நல்ல எதிர்காலம் உண்டுஎன்பதற்கு அறிகுறியாக இருக்கிறது.

மாணவரே முன்னணிப் படையினர்

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் அரசியல், சமுதாயம் பொருளாதாரம், கலவி ஆகிய சகலதுறைகளிலும் நமது மக்களின் நிலை மிகப் பரிதாபகரமாய் இருக்கிறது. தங்கள் சொந்த கலை, பண்பாடு, நாகரிகம், மொழி, வரலாறு அத்தனையையும் மறந்து, வேற்றவரின் மொழி, கலாச்சாரத்திற்குத் தங்களைப் பலியிட்டு உழல்பவர்கள்தான் நமது சமூகத்தினர். இப்படிப் பட்டவரின் வாழ்விற்கு எழுச்சியூட்ட, தூங்கும் அவர்களுக்கு விழிப்புணர்ச்சியூட்ட, புது உற்சாக மூட்ட மாணவர்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? வேறு யார் செய்ய முடியும்? பிறநாட்டு வரலாறுகளைப் படிக்கிற போது அந்தந்த நாட்டு வாலிபர்களால், மாணவர்களால் தான் அந்தந்த நாடு விடுதலைப் போராட்டத்தை நடத்தியிருக்கிறது. விழிப்புணர்ச்சியைப் பெற்றிருக்கிறது. வெற்றி மாலையைச் சூடியிருக்கிறது என்ற உண்மையைக் காணலாம். எகிப்து நாட்டின் சுதந்திரப் போராட்டத்தின் முன்னணிப் படையினர் மாணவ மணிகள்தான்! சீரழிந்த சீனவைச் செம்மைப் படுத்தும் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டவர்கள் மாணவர்கள்தான்! மாணவர்கள், இளைஞர்கள், வாலிபர்கள் இவர்களது முயற்சியால்தான் கலை, நாகரிகம், வரலாறு அத்தனையும் உருவாக்கப்படுகின்றன. ஆனால், துர்பாக்கியமான நம்முடைய நாட்டில் சில பெரியவர்கள், மாணவர்கள், இளைஞர்கள், அநுபவமற்றவர்கள், சுயமாக செயலாற்றும் திறனற்றவர்கள், பிறரைப் பின்பற்றியே நடக்க வேண்டியவர்கள் என்ற தவறான கருத்தை பரப்பி வருகிறார்கள். இது மிகமிகத் தவறு. அவர்களின் மாசற்ற தொண்டு, தெளிந்த அறிவு, கொள்கை ஆர்வம் இவைகள் "அநுபவக்காரர்கள்" என்று சொல்லிக்கொள்பவர்களுடைய தொண்டைவிட ஆயிரமடங்கு அதிக செய்திருப்பதைக் காணலாம். இன்னும் மாணவர்கள் அரசியலிலே கலந்துகொள்ளக் கூடாது என்று கூட அல்ல, அரசியலைப் பற்றியே அறிந்துகொள்ளக் கூடாது, என்ற கருத்து பரப்பப்பட்டு வருகிறது. இந்தக் கருத்தும் நம்முடைய நாட்டைப் பின்னணிக்குச் செலுத்துமே தவிர, அதனை முற்போக்கிற்குச் செலுத்துமார்க்கமாக அமையாது. காரணம், இந்த நாட்டின் எதிர்கால பிரஜைகள் மாணவர்கள். நாடாள வேண்டியவர்கள் மாணவர்கள். அவர்கள் நாட்டு நிலையைப் பற்றியே தெரியாதிருந்தால், நாளைக்கு என்ன செய்ய முடியும்? அரசியலை அறிந்தாக வேண்டும் அது மட்டுமல்ல, இன்றைய தினம் இந்திய உபகண்டம் விடுதலை பெற்ற இடமாகக் கூறப்படுகிறது. மக்கள் சர்க்கார்தான்-குடியரசுதான் - ஜனநாயகம் தான் கோலோச்சும் என்று கூறுகின்றனர். மக்கள் அறிவுத் தெளிவில்லாவிட்டால், ஜனநாயகம் எப்படி வளர முடியும்? வாழமுடியும்? ஜனநாயகம் வெற்றியாக, மக்கள் கல்வி பெற்றாக வேண்டும். நமது நாட்டினரோ, 100க்கு 90 பேர் தற்குறிகள்? இப்படிபட்டவரிடை அரசியல் பிரச்சினைகளை, பொருளாதார சிக்கல்களை, சமுதாய சங்கடங்களை, நாடாள்வோர் செய்யும் நன்மை தீமைகளை எடுத்துக்கூற, மாணவர்களை விட்டால், வேறு கதி யார் இருக்கிறார்கள்.

தமிழருக்குச் சரித்திரம் உண்டா?

மக்கள் நல்லறிவு பெற்றால் தானே மக்களாட்சி மாண்புடன் மணம் வீச முடியும்? இந்த காரியத்தில் திராவிடத்தைப் பொறுத்தவரை யாருக்கும் இல்லாத பொறுப்பு, நம்முடைய மாணவர்களுக்கு இருக்கிறது. அரசியல் என்பதுகூட அல்ல. தாங்கள் வாழும் நாட்டுப் பெயரைக் கேளுங்கள் நமது மக்களுக்குத் தெரியாது. கலையைக் கேளுங்கள் தெரியாது. மொழியைக் கேளுங்கள் தெரியாது. நாகரிகத்தைக் கேளுங்கள் தெரியாது? காரணம், எல்லாத் துறைகளிலுமே பிறருக்கு அடிமைப்பட்டு, பேதமும் பிளவும் கொண்டு, சின்னாபின்னப்பட்டிருப்பது நமது சமுதாயம், பிறரின் கடவுட் கொள்கைகளையும் மதக்கோட்பாடுகளையும் ஏற்று வாழ்வைப் பாலைவனமாக்கிக் கொண்டு வைதீகத்தின் பலிகடாயாய் இருப்பது நமது சமுதாயம். இப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் முன்னோர் வரலாறுதான் எங்குத் தெரியப்போகிறது? எப்படி தெரியமுடியும்? பிரஞ்சுநாட்டானுக்குப் பிரஞ்சு சரித்திரம் இருப்பதுபோல், அமெரிக்கருக்கு அமெரிக்கநாட்டு வரலாறு இருப்பதுபோல், ஆங்கில நாட்டானுக்கு இங்கிலாந்து தேச சரித்திரம்போல், திராவிடர்க்கு—தமிழர்க்கு தங்கள் சரித்திரம் என்று சொல்லிக்கொள்ள உருப்படியான ஓர் வரலாறு இல்லை. இது வெட்ககரமானது மாத்திரமல்ல; வேதனைத்தரக் கூடியதாகும்.

இமயத்தில் நாம்...!

வரலாறு என்று குறிப்பிடுகிற நேரத்தில் மன்னர்களின் அட்டவணை, அந்த மன்னனின் மகன் இவன், இந்த மன்னனின் பேரன் இவன் என்ற மகுடந் தரித்தவர்களின்பெயர் பட்டியலல்ல நான் பேசுவது மக்களின் கலை, பொருளாதாரம், வாழ்வு, நாட்டு நிலை இவைகளெல்லாம் ஒவ்வொரு நூற்றாண்டும் எப்படி இருந்தன என்ற உண்மை விளக்கப்படும் வகையாகத் தொகுக்கப்பட்டால் நல்ல விருப்பு ஏற்படும் என்பது என் நம்பிக்கை சரித்திரம் காலக் கண்ணாடி எதிர்காலத்திற்கு வழிகாட்டி, நல்ல ஆசான், நமது முன்னோர்களின் வீரம், ஆற்றல் பெருமை, தவறுதல்கள், தோல்வி அத்தனையும் காட்டும்படிப் பிடிப்பு திராவிடத்தின் வீரத்திற்கு இன்னும் காட்சியளிக்கும் இடிந்த கோட்டைகள், தூர்ந்துபோன அகழிகள் இவை சாட்சிகள் தமிழகத்தின் கோவில்களிலே உள்ள சிற்பங்கள், ஓவியங்கள் தமிழரின் நுண்ணறிவை, கலைபார்வத்தை எடுத்துக்காட்டும். ஒப்பற்ற உதாரணங்கள் இன்னும் கல்வெட்டுகள், கவிதைகள் இவையெல்லாம் திராவிடத்தின் சரித்திரத்தைத் தீட்ட உதவியளிக்கின்றன. இந்தக் காரியம் நிறைவேறினால்தான், நாட்டுக்குவிமோசனம். மாணவர்கள் திராவிடத்தின் சரித்திரத்தை உருவாக்க முயல வேண்டும். பேராசிரியர்கள், காலத்தின்ஏவலாட்களாகஆகிவிட்டனர். விளைவைக் கருதாத மாணவர்களைத் தவிர, வேறு யாரும் இந்தக் காரியத்தைச செய்வதற்கில்லை. உண்மை வரலாறு தமிழகத்தில் உலவும் நாள் வந்தால் அந்நாள் மேன்மையும், இந்நாள் தாழ்மையையும் உணர முடியும். இரு இடத்திற்கும் இடையே உள்ள பயங்கரப் பள்ளத்தாக்கை மக்கள் புரிவர். அவல நிலைக்குக் காரணம் அறியமுடியும். பரிகாரம்தேட முயல முடியும். உதாரணமாக சேர நாட்டதிபன், செந்தமிழ் வீரன் செங்குட்டவன், வடவாரியர் தமிழரின் மொழியையும், நாட்டையும் பழித்தனர் என்ற சொல் கேட்டு, போர்க் கோலம் பூண்டு, கனக விஜயனைத் தோற்கடித்து, அவன் தலைமீது கல்லேற்றி வந்தான் என்ற சம்பவத்தைப் படிக்கிறார்கள் தமிழர்கள் என்று வைத்துக்கொள்வோம், என்ன என்ன காட்சிகள் கற்பனைக் கண்கள் முன்னே தோன்றும் கோபக் கனல்கக்கும் செங்குட்டுவனின் கண்கள், அவனது போர்மறவரின் வீரம், கங்கையிலே நீரருந்திய அவனது களிற்றுப்படை, அதன் கரையருகே அமைக்கப்பட்டிருந்தபாடி வீடுகள் பதறி ஓடிய ஆரியப்பட்டாளம், இமயத்தின் பனிப்பாறையிலே, தமிழரின் இலச்சினையைப் பொறித்த காட்சி— இவ்வளவும், இதற்கு மேலும் தோன்றத்தான் செய்யும் "இமயத்தில் நாம்" என்று இறுமாப்புடன் பெருமிதமாகக்கூட கூறச்செய்யும். ஆனால், மறு நிமிடத்திலே கற்பனைத் திரையைக் கிழித்து வந்தால் இங்கு காண்பதென்ன? "இமயத்தில் நாம்" என்று, ஆரியம் எக்களிப்புடன் கூறுகிற காட்சியைத் தான் காணமுடியும். காரணம் நாம் வீரத்தைக் காட்டிய நேரத்திலே வேத ஆகமங்களைக் காட்டி, நமது உள்ளத்தை, உணர்வை, உரிமையை யெல்லாம் ஆரியம் அடிபணிய செய்துவிட்டது

தேய்ந்து போயிற்றே திராவிடம்!

இதை நினைக்கிற நேரத்தில் தமிழர்கள், இமயத்திலே தமிழ் வீரம் இருந்ததென்ன? இன்று நம்முடைய உள்ளங்களிலெல்லாம் ஆரிய இலச்சினை பொறிக்கப் பட்டிருக்கிறதே! இதை அகற்றியாகவேண்டும், என்று துடிக்கத்தானே செய்வர்? இது போலவேதான், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் ஆரியப்படை கடந்தான என்ற செய்தியைப் படிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். முதலில் தமிழ் மறவேந்தரின் வீரப்போர், ஆரியப்படையின் அலங்கோலம், இவன் சின்னாபின்னப் படுத்திய திறம் இவையெல்லாம் காட்சிதரும். தமிழகத்தோர் கோழையல்ல, போர்ப் பரம்பரை என்று நினைக்கச் செய்யும். கொஞ்சம் தெளிவாக சிந்தனை செய்கிற நேரத்தில் படையெடுப்பு இல்லாமல், பட்டாளம் பவனி வராமல், இரத்தம் சிந்தாமல், போர்க்களம் அமைக்காமல் சமஸ்கிருதம் என்ற தேவ படையைக் கொண்டே ஓரினத்தவராய், ஒரு மொழியினராய் இருந்த திராவிடரை, தமிழராக, கேரளராக, ஆந்திரராக, கன்னடியராக ஆக்கி, திராவிடப் படையை சின்னாபின்னப் படுத்தியதைத்தானே காண முடியும்!

பிரஜா உரிமை இல்லையே!

சோழ மன்னர்கள் ராஜராஜனும், ராஜேந்திரனும் கப்பற்படை வைத்திருந்தனர். கடல் கடந்து, கீழை நாடுகளையெல்லாம் வென்றனர், என்று அறிகிற நேரத்தில், அப்படிப்பட்ட கடற்படை நாட்டின் கடலோரத்திலே இன்று கட்டுமரங்களைக் கூட காணமுடியவில்லையே, என்ற கலக்க உணர்ச்சியை என்றுவது தோற்றுவிக்கத்தானே செய்யும்! சோழ மன்னர்கள் இலங்கையை கப்பற்படைகொண்டு படையெடுத்தனர். அநுராத புரத்தை முற்றுகையிட்டனர், வெற்றி பெற்றனர். அதே நகரைத் தலை நகராகக்கொண்டு, பல காலம் ஆண்டனர். சிறைபிடித்த சிங்களரைக்கொண்டு காவிரிக்கு அணைக்கட்டினர் என்று படிக்கிற நேரத்தில் அப்படி யெல்லாம் இருந்தவரின் பரம்பரை இன்று இலங்கையிலே எப்படி என்று எண்ணத்தானே செய்யும். காடும் கரம்புமாய் இருந்த இலங்கையை வளமுள்ள தோட்டமாக ஆக்கிய தமிழரின் பிரஜா உரிமை இன்று மறுக்கப்படுகிற பரிதாபக்காட்சியை அவர்கள் படுகிற அல்லல்களை அதை நிவர்த்திக்க சென்னை சட்டசபை காமன் வெல்த் மாநாட்டிற்குச் செல்லும்நேருவிடம் நம்மவர் சார்பிலே வாதாட வேண்டிக்கொண்டுள்ள கருணை மனுவை, இன்னும் மற்றவற்றையும் நினைவில். நிறுத்தாமல் இருக்க முடியுமா? நினைக்கிற நேரத்தில் சொந்த நாட்டார் பிறர் நாட்டிலே கூலிகள்! இந்த நாடு பிறரின் சந்தைக்காடு என்று எண்ணித்தானே தீருவர்.

இவ்வளவையும் ஏன் சொல்லுகிறேன் என்றால் நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு நமது வரலாறு நல்ல எழுச்சியை உண்டு பண்ணியே தீரும். ஆகவேதான் நான் மாணவர்களை வேண்டுவது இந்த மகத்தான காரியத்தில் தங்கள் சிந்தனையைச் செலுத்த வேண்டுமென்று."

பிறகு அரசியலமைப்புத் திட்டத்தில்உள்ள குறைபாடுகளையும் திராவிடத்திற்கு அதனால் ஏற்பட இருக்கிற தீமை

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

அவர்கள் பிரியர்கள்; நாமோ சிற்பிகள்!

அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரஸ் ஏற்பாடு செய்த நடத்திய சமாதான மாநாட்டுக்கும் இப்போது சாந்தி நிகேதனத்தில் நடக்கும் சமாதானப் பிரியர்கள் மாநாட்டுக்குமுள்ள வேறுபாட்டை விளக்கி அன்று தோழர் வி. சங்கரை குறிப்பிட்டதாவது.

'அவர்கள் சமாதான பிரியர்கள்; நாம் சமாதானத்தை நிலைநாட்டப் பாடுபடுபவர்கள். இன்பங்காண விழையும் உளவுணர்வால் உந்தப்பட்டோரவர்கள்; அதிலும் ஆழமாகச் சென்று, மனித வர்க்கம் மேம்பாடுற வேண்டுமென்ற கொள்கையால் உந்தப்பட்டோர் நாம்''

வரலாறு மறந்து...

—[5 ம் பக்கத் தொடர்ச்சி]—

களையும் விரிவாகக்கூறி டல்லி பல'சாம்ராஜ்யங்களின் சவக்குழி'' என்று செல்லக் கேட்டிருக்கிறேன். படித்திருக்கிறேன். சாம்ராஜ்யாதிபதிகளுக்குத்தான் சவக்குழி வெட்டிய இடம்என்று நினைத்திருந்தேன் ஆனால் இன்று அரசியல் நிர்ணய சபை செய்துள்ள திட்டங்களைக்கவனித்தால் நம்மைப்போன்ற சாமான்யர்களின் — திராவிட மக்களின்-உரிமை வாழ்வுக்கு சவக்குழி வெட்டுவதாய் அமைந்துள்ளது,' என்றும் விளக்கிக் கூறினர்.

பிறகு, மாணவர் கழகம் செய்யவேண்டிய அறிவுப் பிரச்சாரம் பற்றியும் கிராமப்புறங்களில் கண்காட்சி முதலியவை ஏற்பாடு செய்ய வேண்டிய அதசியம் குறித்தும், திராவிட மாணவர் கல்வி நிலை குறித்துப் பேசினர்

தலைவர் முடிவுரையுடன். தோழர் சுப்பிரமணிய நன்றி கூற கூட்டம் முடிந்தது இந்த விழாவை வெற்றிகரமாகச் செய்ய உற்சாகமாய் பணியாற்றிய செயலாளர்கள் தோழர்கள் ராம்மோஹன், பா இலக்குமணன் ஆகியோர் முயற்சி பாராட்டுதற்குரியது (ந-நி)

இராமனுதபுர மாவட்ட தோழர்களுக்கு

அருப்புக்கோட்டை, நவ 30— சந்தா ரசீது புத்தகங்கள் வந்துள்ளன. தேவையுள்ளவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

நமது மாவட்டத்தில் இன்னும் பல இடங்களில் கிளைக் கழகங்களை நிறுப்பதற்கு தீவிர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன் ஏராளமான உறுப்பினர்களைச் சேர்க்க முயர்சிக்க வேண்டும் குறிப்பாக ஒவ்வொரு தோழரும் தங்கள் தங்கள் இல்லக்கிழத்திமாரையும் உறுப்பினராகப்பதிவு செய்து கொள்ள முயற்சிக்க வேண்டும், கிளைக்கழக அமைப்பு வேலைகள் முடிந்த பின்புதான் மாவட்டக்கழகத்தை அமைக்க வேண்டும். இந்த வழியில், ஏனைய மாவட்டங்களை விட நாம் பின்தங்கி நிற்கிறோமென்பதை வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

எம். எஸ். இராமசாமி
இராமநாதபுரம் மாவட்டம்
தி.மு. கழக அமைப்பாளர்
அருப்புக்கோட்டை

சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாகிகள் தேர்வுக் கூட்டம்

4—12—49 ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு சென்னை மண்ணடி முத்துமாரி செட்டித் தெரு 2/45 கழகக் கட்டிடத்தில், சென்னை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் தேர்தலும், மாகாணக் கழகத்திற்கு சென்னையின் சார்பாக பிரதிநிதிகள் தேர்தலும் நடைபெறும்.

சென்னையிலுள்ள தி.மு.க. கிளைக் கழகத்தினர் மாவட்டக் கழகத்திற்கென, தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டுபேர் வீதம் உள்ள உறுப்பினர்களை, அவசியம் அனுப்பிவைக்கக் கோருவதோடு, மாவட்டக் கழகத்திற்கென இரண்டு உறுப்பினர்களை இன்னும் தேர்ந்தெடுக்காத கழகத்தினர் உடனே ஆவன செய்து, தங்கள் உறுப்பினர்களையும் கூட்டத்தில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்க வேண்டுகிறேன்.

கே. கோவிந்தசாமி,
அமைப்புக் குழு உறுப்பினர்.
சென்னை மாவட்டம்.

கவலை மீறி சலிப்பற்ற இள மாணவர் கல்லூரி விடுதியில் தற்கொலை

'மனக் கவலைகள் காரணமாக வாழ்க்கையிலேயே சலிப்பு விட்டேன்' என்பதாகத் தனது டைரியில் குறித்து வைத்து விட்டு, தோழர் கே எம். கோபாலன் (20) என்ற பி. எஸ் சி (சிவசாயம்) முதலாண்டு மாணவர் கோவைக் கல்லூரி மாணவ விடுதியைச் சேர்ந்த தனது அறையில் தற்கொலை செய்துகொண்டதாகத் தகவல் கிடைக்கிறது. கடந்த நவ 30-தேதியன்று இரவு விஷம் குடித்து இறந்து கிடந்தார் இள மாணவர். இரவு 9-30 மணிக்கு கதவைத் தாளிட்டுக் கொண்டு படுக்கைக்குச் சென்றவர், விடிந்து நெடுநேரம் வரை வெளியில் வரவில்லையாகையால், கதவை உடைத்துப் பார்த்ததில். மாணவர் மாண்டு கிடந்ததும், பக்கத்தில் ஒரு கண்ணாடி டம்ளரில் விஷ மருந்தொன்று கலக்கி வைத்திருந்ததும் தெரியவந்தாம்.

போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் இதுபற்றி விசாரணை நடத்தி 'விஷங்குடித்துத் தற்கொலை' என்று பதிவு செய்துகொண்டார்.

மண்ணெண்ணெய் பங்கீடு

சென்னை, நவ. 30— நகர பங்கீடு அதிகாரி பின் வருமாறு அறிவிக்கிறார்:—

டிச. 1-ந் தேதி முதல், நகரில் மண்ணெண்ணெய் விலை காலன் ரூ 1—3—7; புட்டி விலை அணு 3½ வாரம் ஒருமுறை என்றிருப்பதற்குப் பதில இரண்டு வாரத்திற்கொருமுறை மண்ணெண்ணெய் தரப்படும். மின்சார விளக்கில்லாத வீட்டிலுள்ளவர்களுக்குவாரத்திற்கு 3 புட்டி என்பதற்குப் பதில் 15 நாட்களுக்கு 6புட்டியாகத் தரப்படும். குடிசை கடைகளிலுள்ளவர்களுக்கு வாரத்திற்கு 1½ புட்டி என்றிருப்பதற்குப் பதில் 15 நாட்களுக்கு 3 புட்டியாகத் தரப்படும். மின்சார விளக்குள்ள வீடுகளின் அறிப் போர்க்கு வழக்கம் போல் கார்டு ஒன்றுக்கு மாதம் ஒரு புட்டி தரப்படும்.

நேஷனல் கால்
(NATIONAL CALL)
ஆங்கில வார இதழ்
முன்னேற்றக் கொள்கைகளைத் தாங்கி வெளிவருகிறது
தனி பிரதி 2 அணு.
ஆண்டு சந்தா ரூ. 6. 6 மாத சந்தா ரூ. 3.
முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை
விவரங்கட்கு: மானேஜர், 'நேஷனல் கால்'
15, முட்டையப்ப செட்டி தெரு,
தியாகராயநகர். சென்னை—17.

மகத்தான 3-வது வாரம்
டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகம்
இமயத்தில் தமிழ்க் கொடி பொறித்தான்!
கனகவிஜயன் தலையில் கல்லேற்றினன்!!
கற்பரசி கண்ணகிக்கு சிலை நாட்டினன்!!!
தமிழரின் வீர சரித்திரத்தில் ஒளி பரப்பி நிற்கும்
சேரன் செங்குட்டுவனின் சரித்திர நிகழ்ச்சிகள்!
2-12-49 முதல் தினசரி
இமயத்தில் நாம்
ரா. வெங்கடாசலன் எழுதியது
சென்னை ஒற்றைவாடையில்
காலமும் கட்டணமும் வழக்கம்போல்

வகுப்புவாதத்தை ஒழித்து, பார்ப்பனியத்தைப் புதைத்து, சுரண்டல் கூட்டத்தை ஒடுக்கி, பாட்டாளிகளை வாழ்விக்க
மதுரையிலிருந்து
சங்குநாதம்
திராவிட முன்னேற்ற வார இதழ்
1-1-50 முதல் ஞாயிறுதோறும் வெளிவரும்
தனிப் பிரதி 0-1-6, ஆண்டு சந்தா 4-8-0
எல்லா ஊர்களிலும் முன்பணம்கட்டக்கூடிய தீவிர நோக்கமுள்ள விற்பனையாளர்கள் தேவை
விவரங்கட்கு:— நிர்வாகி,
"சங்குநாதம்" அலுவலகம்,
166, வடக்குமாசி வீதி, மதுரை.

நெல்லைமாவட்ட தி.மு.க. செயலாளர்களுக்கு

என்னிடமிருந்து அங்கத்தினர் சேர்க்கும் ரசீது பெற்ற தோழர்கள், உடன் அங்கத்தினர்களைச் சேர்த்து, அதற்குரிய பணத்தை உடன் அனுப்பிவைக்க வேண்டுவதுடன், கடிதம் எழுதும் தோழர்கள் தங்களின் தெளிவான முகவரியையும் தெரிவிக்கக் கோருகிறேன்.

சே. வி. கே. சாமி.

சந்தா விவரம்

(உள் நாடு)

ஒரு மாத சந்தா	ரூ	2—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	6—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	12—0—0
ஒரு வருட சந்தா	ரூ.	24—0—0

மூன்றுமாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி. பி. மூலம் அனுப்ப இயலாது

(வெளி நாடு)

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ.	3—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	9—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	18—0—0
ஒரு வருட சந்தா	ரூ.	36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வி.பி: மூலம் அனுப்ப இயலாது

மானேஜர், மாலை மணி

பொழுதுபோக்கு

தமிழ்—நாடகம்

ஒற்றைவாடை — இமயத்தில் நாம

தமிழ்—சினிமா

பாரகன் —	வேலைக்காரி
கிரௌன் —	இன்பவல்லி
கெயிட்டி —	,,
சன் —	மங்கையர்க்கரசி
பிரபாத் —	பூம்பாவை சகோதரர்கள்
வெலிங்டன் —	,,
சரஸ்வதி —	சகாதாரி

தெலுங்கு

மகாராணி — பேசி வேமன்னு

ஆங்கிலம்

Casino —	Daughter of the Jungel
Minerva —	Sinbad the Sailor
Midland —	Fredrid March Christopher Columbus
New Elphinstone—	Canadian Pacific
New Globe —	Manhandled
Roxy —	The Good Earth
Sayaui —	Blood and Sand
Star	Warrior of Russia Triumph of Youth

ஹிந்தி

பிராட்வே —	ஷெஹனாஸ்
செலக்ட் —	ஹரிபகன்
சாகர் —	சேன்ஸ் க்கல்
சித்ரா —	ஸ்டோன் ஜீனா

மூலவியாதிக்கு கருணைகிழங்கு லேகியம்
மூல முளைகள், ரத்தம், சீழ் வடிதல், மூலப் பவுத்திரம், கட்டி, நீர்க் கசிவு, ரணம் சுகமாகும்; வாய்வு, அஜீரணம், மலபந்தம் நீங்கும். 3 நாளில் குணம்தெரியும்.
12 நாள் மருந்து ரூ 3—0—0
1 நாக ஸ்பம் ரூ 2—0—0
P.S.R பங்கஜம் வைத்தியசாலை
பழனி (S. I.)

வானொலி

சென்னை
(4-12-49 ஞாயிற்றுக்கிழமை)
[211.3 மீட்டர்கள்]

காலை:
7-15 தமிழில் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ.ச.)
8-30 பாப்பா மலர்
9-00 என். ராமசாமி-மிருதங்கம்

பிற்பகல்:
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1 40 சினிமா பாட்டுகள் (இ. த.)
2 00 தமிழில் செய்திகள்
2 10 வீணை
3.00 டி ஆர். பாலசுப்பிரமணியம்—பாட்டு

மாலை:
4-00 கதம்பம் (இசைச்சித்திரம்)
5-30 சே. கணேசன்—பாட்டு
6 00 ஆங்கிலத்தில் செய்திகள்
6 15 எ. வி. செல்லம்மாள்—பாட்டு
6.45 வி கோதண்டராமன்—பாட்டு

இரவு:
7-15 தமிழில் செய்திகள்
7-30 குரல்வளை
8-00 என். எ. சுந்தரம்—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9 30 எ வி. நாராயணன்-பாட்டு
10-30 முடிவு.

திருச்சி
[395.8 மீட்டர்கள்]

காலை:
7 15 தமிழில் செய்திகள்
7-30 சே. தங்கம்மா—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8 30 எஸ். துரைசாமி—பாட்டு

பிற்பகல்:
12 00 கதம்பம் (இ. த)
12.30 முத்துப்பணி (பாட்டு விளக்கம்)
12-35 காப்பியரங்கம் (தொடர்ச்சித்திரம்)
1-00 மணி மலர்
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 இசைச் சோலை (ஒ. ப.)
2-00 தமிழில் செய்திகள்
2-10 பெண்ணுலகம்
2-30 நீங்கள் கேட்டவை

மாலை:
5 00 சே. தங்கம்மா—பாட்டு
5-40 சங்கரய்யர்—வீணை
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 எஸ். துரைசாமி—பாட்டு
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:
7-15 தமிழில் செய்திகள்
7-30 சித்ரானம்
7-40 இசைப்ப விமர்சனம்
9 00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-35 இசைவேளை (இ. த.)
10-00 முடிவு.

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.